05.07.2017

# 100 கிளைகளுடன் அதிசயப் பனை!



விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அருகே 100 கிளைகளுடன் கூடிய அதிய பனை மரம் இருப்பது தெரியவந்துள்ளது.

செஞ்சியை அடுத்த அவலூர்பேட்டை சித்தகிரி முருகன் கோயில் மலையடிவாரத்தில் 100 கிளைகளைக் கொண்ட அதிய பனை மரத்தை அந்த ஊர் மக்கள் கண்டறிந்தனர்.

சித்தகிரி மலையடிவார பகுதியானது ஆள் நடமாட்டம் இல்லாமல் இருக்கும் பகுதியாகும். இந்நிலையில், இந்த ஊரைச் சேர்ந்த ஒருவர் இந்தப் பகுதியை சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தபோது, ஒரு பனை மரம் வேரில் இருந்து நுனி வரை பனை ஓலைகளால் மூடியிருப்பதைக் கண்டார்.

பின்னர், கூர்ந்து பார்த்தபோது அந்தப் பனை மரம் பல்வேறு கிளைகளாக வளர்ந்திருப்பது தெரியவந்தது.

இதையடுத்து, தகவலறிந்து வந்த அவலூர்பேட்டை கிராம மக்கள், பனை மரத்தின் சருகுகளை கழித்தனர். இதைத் தொடர்ந்து, அந்த பனை மரத்தில் 100 கிளைகள் இருந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்தனர். ஐந்து விரல்களைப்போல தோற்றளிக்கும் இந்த கிளையில் இருந்து மீண்டும் மீண்டும் ஐந்து விரல்களை போன்ற கிளைகள் உள்ளன.

## தலைவலி, ரத்த அழுத்தம், தைராய்டு, முகப்பரு ஆகிய அனைத்துப் பிரச்னைகளுக்கும் ஒரே தீர்வு!



முட்டைக்கோஸ் நமது உடலுக்கு நம்பமுடியாத பல்வேறு நன்மைகளைத் தரக்கூடியது, மேலும் வியக்க வைக்கும் பல மருத்துவ குணங்களை பெற்றிருக்கும் ஒரு காய்கறி. ஊட்டச்சத்து

மற்றும் வைட்டமின் சத்துக்கள் நிறைந்திருக்கும் முட்டைக்கோஸை வைத்து பல்வேறு சுகாதார பிரச்சனைகளைக் கூட சரி செய்யலாம். மேலும் முட்டைக்கோஸை நம் தோலின் மீது சிறிது நேரம் வைத்தால் காந்தம் போல் செயல்பட்டு பல நோய் காரணிகளை உடல் வழியாக ஈர்த்து வெளியேற்றக் கூடியது.

## இன்றைய மருத்துவ சிந்தனை பப்பாளி



பப்பாளிப் பழத்தைச் சாப்பிட்டு வந்தால் வயிற்றுப்போக்கு குணமாகும்.

பப்பாளிப் பழத்தை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் சிறுநீரகக் கல் கரையும்.

பப்பாளிப் பழத்தைத் தினமும் சாப்பிட்டு வந்தால் ஞாபக சக்தி அதிகரிக்கும்.

பப்பாளிப் பழத்தை முகத்தில் தடவி ஊற வைத்து, குளிர்ந்த நீரில் கழுவிவந்தால் கரும்புள்ளிகளும், சுருக்கங்களும் தீரும்.

பப்பாளி பழத்தை (செங்காய்) தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் மாதவிலக்கு கோளாறுகள் குணமாகும்.

பப்பாளிப் பழத்தை தினமும் சாப்பிட்டு வந்தால் நீரிழிவு நோய் கட்டுப்படும்.

பப்பாளிப் பழத்தை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் பித்த சம்பந்தமான நோய்கள் குணமாகும்.

பப்பாளிப் பழத்தை வெண்குஷ்ட நோய் அறிகுறி உள்ளவர்கள் சாப்பிட்டு வந்தால் குணம் கிடைக்கும்.

பிஞ்சு பப்பாளிக் காயை குறுக்காக வெட்டினால் கிடைக்கும் பாலை, விளக்கெண்ணெய் சேர்த்து உள்ளுக்குச் சாப்பிட்டு வந்தால் பேதி உண்டாகி, வயிற்றில் உள்ள பூச்சிகள் வெளியேறிவிடும்.

பப்பாளிக் காயை சமைத்துச் சாப்பிட்டு வந்தால் தாய்ப்பால் அதிகம் சுரக்கும்.

பப்பாளி இலைச் சாற்றை தினந்தோறும் 50 மில்லி அளவுக்கு குடித்து வந்தால் உடல் பருமன் குறையும்.

KOVAI HERBAL CARE

கோவை பாலா,

இயற்கை வாழ்வியல் நல ஆலோசகர் மற்றும்

Foot and Hand Reflexologist

Cell : 96557 58609

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

# சர்க்கரை நோயாளிகளுக்கு 'கறுப்புகாவனி' அரிசி:இயற்கை முறையில் விளைவித்து பொன்னேரி விவசாயி அசத்தல்

சர்க்கரை நோயாளிகளுக்கு உகந்த, 'கறுப்புகாவனி' மற்றும் ஆர்.என்.ஆர்., நெல் ரகங்களை இயற்கை உரங்களை போட்டு, வளர்த்து அறுவடை செய்து விவசாயி அசத்தி உள்ளார்.பொன்னேரி அடுத்த, சின்னகாவணம் கிராமத்தைச் சேர்ந்தவர் தேவராஜன். இவர், இயற்கை விவசாயத்தின் மீது மிகுந்த ஆர்வம் கொண்டவர். அதே போன்று, நாட்டின் பல்வேறு பகுதிகளில் விளைவிக்கப்படும் நெல் ரகங்களை பற்றி தெரிந்து கொண்டு, அதை வளர்ப்பதில் ஆர்வம் காட்டுவார்.

பெருமிதம்

தற்போது, சர்க்கரை நோயாளிகளுக்கு உகந்ததாக கருதப்படும், 'கறுப்புகாவனி' நெல் ரகத்தினை பயிரிட்டு அசத்தியுள்ளார்.ஐந்து மாதங்கள் பருவ காலம் கொண்ட இந்த ரகத்தினை, தன் ஒன்றரை

ஏக்கர் நிலத்தில் பயிரிட்டு, 37 மூட்டை நெல்லை அறுவடை செய்துள்ளார்.

கறுப்பு நிறத்தில் உள்ள இந்த அரிசியை சர்க்கரை நோயாளிகள் வாங்கி செல்வதாகவும், இதில் சர்க்கரை சத்து முற்றிலும் இல்லை எனவும் விவசாயி பெருமிதத்துடன் கூறுகிறார்.
அதேபோன்று, தோட்டக்கலை துறை மூலம், மஹாராஷ்டிரா மாநிலத்திற்கு, விவசாயம் குறித்து பயிற்சிக்கு சென்றவர் அங்கிருந்து, ஆர்.என்.ஆர்., ரக நெல் விதையை வாங்கி வந்து, விளைவித்து உள்ளார்.இதுவும் சர்க்கரை சத்து குறைவு என்பதால், நீரிழிவு நோயாளிகளுக்கு உகந்ததாகும். தற்போது இந்த வகை நெல் ரகத்தினை தன், 3 ஏக்கர் நிலத்தில்
மீண்டும் பயிரிட்டு உள்ளார்.

அமிர்த கரைசல்

பயிர்களுக்கு ரசாயன மருந்துகளை தெளிக்காமல் தொழு உரம், வேப்பம் புண்ணாக்கு, சூடோமோனாஸ் என, இயற்கை உரங்களை போட்டு விவசாயம் செய்கிறார்.பயிர் வளர்ச்சிக்கு மீன் அமினோ அமிலம், பயிரின் ஊட்டசத்திற்கு பழங்காடி, நோய் தாக்குதலில் இருந்து காக்க
அரிசி கஞ்சி கரைசல், தழை சத்திற்கு அமிர்த கரைசல் என, பல்வேறு வகையான இயற்கை உரங்களையும் பயன்படுத்துகிறார்.
இவரிடம் சர்க்கரை சத்து குறைவாக உள்ள அரிசி இருப்பதை அறிந்து, நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் வந்து வாங்கி செல்கின்றனர்.

**குறைந்த தொகையில் பயிர்க்காப்பீடு திட்டத்தில் இணைய... விவசாயிகளுக்கு அழைப்பு! பிரிமியம் தொகை, செலுத்தும் காலக்கெடுவும் வெளியீடு!**



வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறை பயிர்களுக்கு, குறைந்த பிரீமியம் செலுத்தி, பிரதமர் பயிர்க்காப்பீடு திட்டத்தில் பயனடையலாம் என, மாவட்ட நிர்வாகம் அழைப்பு விடுத்துள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில், பிரதமர் பயிர்க்காப்பீடு திட்டத்தில், "காரீப்' பருவத்தில் பயிரிடும் பயிர்கள் விவரம் வெளியிடப்பட்டுள்ளது. மக்காச்சோளம், உளுந்து, பாசிப்பயறு, நிலக்கடலை, பருத்தி, சோளம், எள் போன்ற வேளாண் பயிர்
களும்; வாழை, மரவள்ளி, மஞ்சள், வெங்காயம் போன்ற தோட்டக்கலை பயிர்களும், காப்பீடு திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளன. விதைக்க முடியாத நிலை, மழையின்றி பயிர் காய்ந்துவிடுவது, பயிர் இழப்பு சேதாரம், அறுவடைக்கு பின் ஏற்படும் மகசூல் இழப்பு ஆகிய பிரிவுகளில், இழப்பீடு வழங்கப்படும்.

ஆதார் அட்டை

கட்டாயம்

அறிவிக்கை செய்யப்பட்ட கிராமங்களில், அந்தந்த பயிர்களை சாகுபடி செய்து, காப்பீடு திட்டத்தில் இணையலாம். தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், தொடக்க வேளாண் கடன் சங்கங்களில், பயிர்க்கடன் பெற்ற மற்றும் கடன் பெறாத விவசாயிகளும், காப்பீடு திட்டத்தில் இணையலாம். விண்ணப்பத்துடன் இரண்டு "பாஸ்போர்ட்' அளவு போட்டோக்கள், வங்கி கணக்கு புத்தகம், ஆதார் அட்டை நகல்,

நில உரிமை சிட்டா, அடங்கல் அல்லது கிராம நிர்வாக அலுவலர் சான்று, பிரீமியம்

செலுத்தும் வங்கி "சலான்' ஆகியவற்றை இணைத்து விண்ணப்பிக்கலாம்.

பிரீமியம்

செலுத்தும் காலம்

"காரீப்' 2017 பருவத்தில், காப்பீடு திட்டத்தில் பிரீமியம் செலுத்துவதற்கான காலக்கெடு வெளியிடப்பட்டுள்ளது. மக்காச்சோளத்துக்கு, செப்., 30க்குள் பிரீமியம் செலுத்த வேண்டும். ஏக்கருக்கு, 22,050 ரூபாய் காப்பீடு கிடைக்கும். உளுந்து பயறுக்கு, செப்., 30க்குள் பிரீமியம் செலுத்தலாம். ஏக்கருக்கு, 13 ஆயிரம் காப்பீடு கிடைக்கும்; 260 ரூபாய் பிரீமியம் செலுத்த வேண்டும். பாசிப்பயறுக்கு, ஆக., 31ம் தேதிக்குள், ஏக்கருக்கு, 260 ரூபாய் வீதம் பிரீமியம் செலுத்த வேண்டும்; 13 ஆயிரம் ரூபாய் அளவுக்கு காப்பீடு கிடைக்கும்.

அவிநாசி மற்றும் திருப்பூர் வட்டாரத்தினர், நிலக்கடலைக்கு, வரும், 31க்குள்; மற்ற வட்டாரத்தினர், ஆக., 31க்குள் பிரீமியம் செலுத்த வேண்டும். ஏக்கருக்கு, 23,150 ரூபாய் காப்பீடு கிடைக்கும்; 463 ரூபாய் பிரீமியம் தொகை. பருத்திக்கு, செப்., 30க்குள், ஏக்கருக்கு, 1073 ரூபாய் பிரீமியம் செலுத்தினால், 21,450 ரூபாய்

காப்பீடு கிடைக்கும்.

இறவை சோளத்துக்கு, வரும், 31ம் தேதிக்குள்ளும்; மானாவாரி சோளத்துக்கு, செப்., 30க்குள்ளும், ஏக்கருக்கு, 186 ரூபாய் பிரீமியம் செலுத்த வேண்டும்; ஏக்கருக்கு, 9,300 ரூபாய் காப்பீடு கிடைக்கும். வாழைக்கு, ஆக., 31க்குள், ஏக்கருக்கு<, 3,655 ரூபாய் பிரீமியம் செலுத்தினால், 73 ஆயிரத்து 100 ரூபாய் காப்பீடு கிடைக்கும்.

மஞ்சள் பயிறுக்கு, ஆக., 31க்குள், ஏக்கருக்கு, 3,150 ரூபாய் பிரீமியம் செலுத்தினால், 63 ஆயிரம் ரூபாய் அளவுக்கு காப்பீடு கிடைக்கும். வெங்காய பயிருக்கு, செப்., 30க்குள், 1,600 ரூபாய் பிரீமியம் செலுத்தினால், 32 ஆயிரம் ரூபாய் அளவுக்கு காப்பீடு பெறலாம்.

"மொபைல்' எண் அவசியம்

மக்காச்சோளம், உளுந்து, பாசிப்பயறு,
நிலக்கடலை, சோளம் போன்ற பயிர்களுக்கு,
காப்பீடு தொகையில், 2 சதவீதமும்; பருத்தி,
வெங்காயம், மஞ்சள், வாழை, மரவள்ளிக்கு,
5 சதவீதமும், விவசாயிகள் செலுத்தும் பிரீமியமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எஸ்.எம்.எஸ்., விவரம் பெற, மொபைல் எண்களை கட்டாயம் பதிவு செய்ய வேண்டும். மேலும் விவரங்களுக்கு,
உதவி வேளாண் இயக்குனர் மற்றும் தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகங்களை தொடர்பு கொள்ளலாம் என, மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

எங்கு விண்ணப்பிக்கலாம்?

காப்பீடு திட்டத்தில் சேர விரும்புவோர், அருகில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களை அணுகலாம். காப்பீடு நிறுவன

பிரதிநிதிகள் அங்கு இருந்து, விவசாயிகளுக்கு உதவி செய்வர். தேசியமயமாக்கப்பட்ட வங்கி, கூட்டுறவு கடன் சங்கம் அல்லது காப்பீடு நிறுவனத்திடம் பிரீமியம் செலுத்தலாம். விவசாயிகள், குறைந்த பிரீமியம் செலுத்தி, பிரதமர் பயிர்க்காப்பீடு திட்டத்தின் மூலம்
பயனடையலாம்.

## சொட்டு நீர் பாசன மானியம் விவசாயிகளுக்கு அழைப்பு

மானியத்தில் சொட்டு நீர் பாசனம் அமைக்க விரும்பும் விவசாயிகள், பொங்கலூர் வட்டார தோட்டக் கலைதுறை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

இதுகுறித்து, தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் (பொறுப்பு) ராஜேந்திரன் வெளியிட்ட அறிக்கை:

சொட்டு நீர் பாசனம் அமைக்க, "பிரதமரின் நுண்நீர் பாசன அபிவிருத்தி திட்டத்தின்' கீழ், 2017-2018ம் ஆண்டுக்கான நிதி, 39 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், 65 எக்டர் நிலத்தில் செயல்படுத்தப்பட உள்ளது.

மானியத்தில் சொட்டு நீர் பாசனம் அமைக்க விரும்பும் விவசாயிகள், நில உரிமைச்சான்று, சிட்டா, அடங்கல் (கிணற்றுடன்), நில வரைபடம், கூட்டு வரைபடம், ஆதார் அட்டை, ரேஷன் கார்டு நகல், பாஸ்போர்ட்

அளவு போட்டோ மூன்று, நீர் மற்றும் மண் மாதிரி முடிவு அறிக்கை, தாசில்தாரிடம் இருந்து பெறப்பட்ட சிறு, குறு விவசாயி என்பதற்கான சான்று ஆகியவற்றுடன், பொங்கலூர் தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் அலுவலகத்தில் பதிவு செய்யலாம், என்று கூறப்பட்டுள்ளது.

## வெயில், மழையில் வீணாகும் தானிய சேமிப்பு கலன்கள்

திருப்பூர் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில், வீணாகி வரும் தானிய சேமிப்பு கலன்களை, தகுதியான பயனாளிகளுக்கு வழங்கலாம் என, இயற்கை ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.திருப்பூர் வட்டார வேளாண் விரிவாக்க மையம், ஒன்றிய அலுவலக வளாகத்தினுள் இயங்குகிறது. விவசாயிகளுக்கு தேவையான விதைகள், இடுபொருட்கள் வழங்கப்படுகிறது. கடந்த காலங்களில், அதிகம் பயன்பாட்டில் இருந்த அந்த மையம், தற்போது பயன்பாடு குறைந்துள்ளது.

வளாகத்தில், தானிய சேமிப்பு கலன்கள், வெயில், மழையில் வீணாக போட்டு வைக்கப்பட்டுள்ளது. இது, காண்போரை கவலையடைய செய்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன், விவசாயிகளுக்கான தானிய சேமிப்பு கலன் வழங்கும் திட்டம் இருந்தது. அப்போது, இருவேறு அளவுகளில், தானிய சேமிப்பு கலன்கள் தயாரிக்கப்பட்டன. தரமான, இரும்பு தகரத்தில் இருந்து, ஐந்து அடி மற்றும் மூன்று அடி உயரத்தில் கலன்கள் அமைக்கப்பட்டன. தானியத்தை மேல் துளை வழியாக கொட்டி சேமி க்கலாம். தேவையான போது, தரைப்பகுதியில் உள்ள துளை வழியாக, தானியத்தை எடுக்கும் வகையில், கலன்கள் அமைக்கப்பட்டிருந்தன.

தற்போது, மூன்று தானிய கலன்கள், வேளாண் விரிவாக்க மையத்தில் வீணாக போட்டு வைக்கப்பட்டுள்ளன. மழையிலும், வெயிலிலும் காய்ந்து வீணாகி வருகிறது. நவீன

தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட தானிய சேமிப்பு கலன்கள் வீணாவதை தடுக்க, அவற்றை, தகுதியான விவசாயிகளுக்கு வழங்கலாம். அரசு திட்டங்களுக்கு ஏதாவது பயன்படுத்தலாம் என, இயற்கை ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## விலை வீழ்ச்சியால் நிலைகுலைந்த நீலகிரி தேயிலை விவசாயம்



மத்திய அரசின் வணிக மற்றும் தொழில் அமைச்சகத்தின் கீழ் உள்ள தேயிலை வாரியம் தேயிலை ஒரு பண பயிர் என்று சிறு விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தியது. இதனால் நீலகிரி

மாவட்டத்தில் சிறு விவசாயிகள் காய்கறி பயிர் சாகுபடியில் இருந்து தேயிலை விவசாயத்திற்கு மாறுவதற்கு ஆர்வம் காட்டினர்.தேயிலை வாரியம் தேயிலை தோட்டம் அமைக்க மானியம் வழங்கியது. தமிழக அரசும் தோட்டக்கலைத்துறை மூலம் மானிய விலையில் தேயிலைநாற்றுகள் மற்றும் நிழல் தரும் மரமான சில்வர் ஒக் மரக்கன்றுகளையும் மானிய விலையில் வழங்கியது. மேலும் தென்னிந்திய தோட்ட அதிபர் சங்கமான உபாசி நிறுவனம் தரமான குளோனல் நாற்றுகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கியது.

அந்த நேரத்தில் சிறு விவசாயிகள் உபாசி வேளாண்மை ஆராய்ச்சி மையத்தில் பயிற்சி பெற்று கொட்டை நாற்றுகளுக்கு பதிலாக மகசூல் அதிகம் தருகின்ற குளோனல் தேயிலை நாற்றுகளை நர்சரியில் உற்பத்தி செய்து உப தொழிலாக கொண்டு விற்பனை செய்து வந்தனர். இந்த நிலையில் 1996–ம் ஆண்டு தேயிலைக்கு விலை உயர ஆரம்பித்தது.

தென்னிந்தியாவில் சி.டி.சி ரக தேயிலை தூள் தரமாக உற்பத்தி செய்ததால் ரஷ்யா நாடு இந்த தேயிலை தூளை இறக்குமதி செய்ய ஆர்வம் காட்டியது. தேயிலை தூள் விலை உயர்வால் விவசாயிகள் பறிக்கும் பச்சை தேயிலைக்கும் விலை கூடியது. ஒரு கிலோ பச்சை தேயிலை 20 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்பட்டது. இதனால் தேயிலை விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்பட்டது.

தேயிலை தூளின் தரம் நாட்கள் செல்ல செல்ல குறைவடைந்ததால் ரஷ்யா தேயிலை தூளை வாங்க மறுத்தது. மேலும் ரஷ்யாவில் உள் நாட்டு குழப்பம் ஏற்பட்டதால் ஏற்றுமதி பாதிக்கப்பட்டது. 2000–ம் ஆண்டில் பச்சை தேயிலை ஒரு கிலோ ரூ.4.50–க்கு கொள்முதல் செய்யப்பட்டது. விலை வீழ்ச்சியினால் பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டதால்

நீலகிரி மாவட்டமே ஸ்தம்பித்தது. அந்த ஆண்டில் நடைபெற இருந்த கோடை விழா ரத்து செய்யப்பட்டது. அதன் பிறகு தேயிலை வாரியமும், உபாசி வேளாண்மை அறிவியல் மையமும் இணைந்து சிறு விவசாயிகள் தேயிலை உற்பத்தியாளர்கள் மற்றும் தேயிலை சம்பந்தப்பட்டவர்களுக்கு பயற்சி வழங்கியது. அந்த கால கட்டத்தில் மானியமும் மத்திய அரசால் வழங்கப்பட்டன. அந்த கால கட்டம் தொடங்கி இதுவரை தேயிலை விலையில் ஏற்றம் இறக்கம் ஏற்பட்டு வருகிறது. தற்போதுள்ள கூலி உயர்வு இடு பொருட்களின் விலை உயர்வு இவற்றால் சிறு விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு ஜனவரி முதல் மார்ச் வரை தேயிலைக்கு விலை கூடி இருந்தது. அந்த சமயத்தில் சாதாரண வகை பச்சை தேயிலைக்கு 19 ருபாய் வரை வழங்கப்பட்டது. அதன் பிறகு படிப்படியாக விலை வீழ்ச்சி ஏற்பட்டு தற்போது 12 ருபாய் ஒரு கிலோ பச்சை தேயிலை என்று விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தேயிலை வாரியமும் இந்த விலையை உறுதி செய்துள்ளது. இந்த விலையினால் சிறு விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு விரக்தி அடைந்த நிலையில் உள்ளனர் அவர்கள் விலையை அதிகரித்து வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பி உள்ளனர்.